டாக்ஷர அந்தா ... என

ஆறெழுத்தந்தா

சென்னை பூமகள் பதிப்பு

இதன் விலை] 1936 [அணா 2

வேலுமயிலுந்துணை

பொதிகை அகத்தியமுனிவர் அ

ஷடாக்ஷர அந்தாதி என்னும்

ஆறெழுத்தந்தாதி

20 JAN 1937



அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை.

இதன் விலை] 1936 [அணா 4

உ

வேலுமயிலுந்துணை

* ஆறெழுத்தந்தாதி

காப்பு - விநாயகர் வணக்கம்

நேரிசை வெண்பா

கற்பக மிருக்கத்தன் கந்தமிகு நந்தவனப்
பொற்பகமி ருக்கப் பொதிகைமுனிநீ—நற்கரகத்
தண்ணீரை யாதரித்த யைங்துகரன் காப்பாமெம்
மெண்ணீரை யாறெழுத்திற்கே.

முருகர் வணக்கம்

கட்டளைக் கலித்துறை

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுமுண் டங்கையினி
லேறிய வேலுண்டு வெற்றிம யூரமுண் டேவல்செய்ய
மீறிய சிங்கத் துரைவீர வாகுண்டு வேளைக்கிங்கே
கூறிய போது வருவான் குமர குருபரனே.

நூல்

ஆனந்தமாறெழுத்தாலயமாமென தங்கமெல்லாந்
தானந்தமாதிமுதற்பொருளாகிச்சத்தாங்கமுநீ
மோனந்தமுன்னுளதென்னுளதுன்னுளதென்னுளதா
லீனந்தம்போக்கியெனைநீயதாக்கியவென்குருவே. 1

என்குருவேகிருபையானந்தமோனமெழிற்சிவனார்
தன்குருவேபரையீராறுகாலஞ்சமைந்தநமைப்
பின்குருவேவிந்துநாதம்பரம்பெரும்பேரொளிக்கு
முன்குருவேமுருகோனாறெழுத்தென்னுமூலங்களே. 2

மூலங்களேசிவஞ்சத்திவித்தாயுன்னுமுன்பிறந்த
சீலங்களேபஞ்சகர்த்தாவுநின்வழிதேறியொரு
காலங்களேயொக்கவேகக்கருக்கடையினின்ற
கோலங்களேமுருகோனாறெழுத்தின்குணக்குன்றமே. 3

---

* ஆறு எழுத்து என்பது, முருகருக்குரிய எழுத்தாம்.

ஆறெழுத்தந்தாதி

க்குன்றமேயன்பருள்ளூடுருவிக்குமுகுமென
மணக்குன்றமேமுருகாவென்றன்கன்மத்தைமாற்றிடுங்கங்
கணக்குன்றமேயெங்குமாறெழுத்தாயுருக்காட்டியபொற்
கணக்குன்றமேயண்டபிண்டமொன்றாய்நின்றசூத்திரமே. 4

திரமேமுருகநின்னாறெழுத்தங்கிதஞ்சிந்தைபற்றிப்
பரமேயிதென்றுள்ளுணர்ந்தோர்க்குமன்பர்பழவினைநிட்
டுரமேசிதையும்பிறப்பறுங்கூற்றுமொழியுநில
வரமேயெக்காலமுஞ்சாகார்சிவசித்தர்மானிலத்தே. 5

நிலத்தேயிறப்பும்பிறப்புமருக்கன்மநீங்குமிப்பூ
தலத்தேமிதக்கினுமேமுருகாவென்றுன்னாறெழுத்தைப்
பிலத்தேபிடித்தவர்க்கப்பாநின்னானந்தப்பேரொளிரச்
சலத்தேமிதப்பரல்லாற்பின்னைவேறுந்தடையில்லையே. 6

தடையாதுபாசத்துருகாதுமாயைச்சரமறுகி
லுடையாதுகாயமுலையாதுள்ளாவியுலகிலினிப்
படையாதயன்கைப்பவநீக்கிஞானப்பரத்துறைவா
ழுடையாவெங்கெங்குஞ்சிவமாகக்காட்டும்நின்னாறெழுத்தே. 7

ஆறெழுத்துண்மையறியார்கள்கன்மமறுக்கவப்பால்
வேறெழுத்தில்லைவெண்ணீறில்லைமால்சிவவேடமில்லை
தேறெழுத்தேதயன்கையுங்கருக்குழிச்சேரலும்பின்
மாறெழுத்தந்தகன்றென்புலத்தேயென்றும்வெளவுவதே. 8

வெளவுநின்றாட்கன்பிலாதேநரகத்தைவெளவும்வஞ்சர்க்
கெவ்வழிமோக்கத்திற்கேதுவென்றாலெழுத்தாறுளநின்
சவ்வுரவ்வவ்வுணவ்பவ்வுவவ்வக்கரந்தன்னிலொன்றைக்
கௌவுவர்கௌவுவர்சொற்பிறந்தாற்றிரங்காட்டுமதே. 9

கதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேவச்சிரகாயந்தரும்
நிதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேயுண்ணிரப்புமருண்
மதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேயென்னுள்வைத்தபொற்றாட்
டுதிகாட்டுமேகுகநின்னாறெழுத்துள்ளசூத்திரமே. 10

சூத்திரநம்முடற்சக்கரமேருவைச்சுற்றியரை
மாத்திரையிற்சந்திரசூரியர்போல்வரும்வாசிதனைக்
காத்திரலாயமட்டியோகத்திருந்துங்கருமவுனச்
சாத்திரங்கைவருநின்னாறெழுத்துந்தரிநெஞ்சர்க்கே. 11

நெஞ்சேபொற்பீடநந்தேகஞ்சிவாலயநீள்பொறிக
ளஞ்சேயிவைபெறுமாதரஞ்சத்தியருணிலைவிட்
டுஞ்சாதுணர்வுமுருகன்றனாறெழுத்துன்னுவர்க்குச்
செஞ்சேவலன்றன்றனக்குஞ்சரீரமுஞ்சித்துமொன்றே. 12

ஒன்றேமுருகநின்னாறெழுத்தோசைபுலகமெல்லாம்
நின்றேபலபொருணீயென்றுநானென்றுநீதிவெவ்வே
றன்றேசமயங்களீராறுமாய்நின்றவாநந்தநீ
யென்றேதெளிந்தவர்க்கேகன்மமாயையிருளறுமே. 13

இருளறுமெங்குமொளியாய்நிரம்புமிரவுபகன்
மருளறுமாயுளும்விர்த்திக்குங்கர்த்தன்மட்டற்றுயர்ந்த
பொருளறுகோணத்தினுள்ளேயரியபொறியுளநின்
றருளருணாசலவேலையுனதெழுத்தாறுன்னவே. 14

உன்னரிதாமுருகோனாறெழுத்தினையுச்சரித்தார்க்
கென்னரிதாம்பொருளொன்றிலையேபிறப்பும்பிறப்பும்
பின்னரிதாமிவையேதென்றுபேசிற்பிரமனிடத்
தன்னதிகாரமுந்தப்பியப்பானின்றதானவனே. 15

தானவனாதிவிநாயகனான்முகன்சங்குசக்ர
வானவன்ருத்ரன்மயேஸ்வரனீசன்வடிவிவையே
யானவனாறுமுகத்தன்பரசமயத்தன்முரு
கோனவனின்னெழுத்தாறேபொருளெனக்கொண்டனனே. 16

கொண்டனைகையிற்பொறைவேலன்பின்புறுகொக்கிரண்டாய்க்
கண்டனைமஞ்ஞையுஞ்சேவலுமாய்வரக்காரணத்திற்
பண்டனையாதிபகவனிப்போதவன்பாலனென
விண்டனையாறெழுத்தாய்முகமாறுடன்மேவியதே. 17

மேவியவாதிசிவாயசதாசிவவேலைதனி
லாவியநம்பெருமான்முருகாவென்றுன்னாறெழுத்தே
தாவியவுள்ளமதாகவெண்ணீற்றைத்தரித்துனையே
கூவியபேர்கண்முன்னஞ்சலென்றேவந்துகூடுவையே. 18

கூடுவையன்பருள்ளாலயமாமெனக்கூடியிருந்
தாடுவைநீமுருகோனாறெழுத்தினையாரொருவர்
நாடுவைநீயவர்கன்மந்தொடைத்துநரகரித்துப்
போடுவைநீயென்றுகண்டோரடைவர்நற்புத்தியீதே. 19

…கோனாறெழுத்தின்பொருளறியச்
…யெங்குமாய்நின்றசர்வமுகச்
சுத்தியுநீயன்பர்பார்க்கின்றஞானத்தெளிவுதரு
முத்தியுநீயன்றிவேறில்லைவேதமுடிந்திடவே. 20

முடிந்திடம்பேச்சற்றமோனமெய்ஞ்ஞானமுதல்வநின்னைப்
படிந்திடமேபதிபாசம்பசுவிருட்பற்றற்றதும்
விடிந்திடந்தானென்னுநானென்னுமாணைபயும்விட்டெடவையுங்
கடிந்திடத்தப்புறத்தப்புறத்தாநந்தங்காணுமதே. 21

காணுமென்பான்முருகோனாறெழுத்தின்கனியையுண்டே
பூணுமென்பாலைம்புலனுமொன்றாய்ச்சரம்பூரித்துள்ளாய்த்
தோணுமென்பாலிற்றசையூடசைவற்றசோதியொத்தா
லாணுமென்பார்பெண்ணுமென்பார்நின்பாலன்றறிவதுவே. 22

அறிவதுவேநின்னாறெழுத்தைந்தெழுத்தாலதிலே
பிறிவதுமவ்வெழுத்தண்டபிண்டத்திற்பெருஞ்சித்திவாய்ச்
செறிவதுமப்பதநின்றோரெழுத்துந்திகாந்தமுட்டி
மறிவதுகண்டுதன்னுள்ளேதெளிந்தமவுனங்களே. 23

ஏதானவாறெழுத்துள்ளைந்தெழுத்தன்றெடுத்ததெல்லாஞ்
சூதாகநானென்றுருப்பண்ணும்வார்த்தையைத்தூக்குதற்கோ
ராதாரமாகியகமும்புறமுமருவுருவா
மோதாவுணர்வுமுயிருமதாய்நின்றதோரெழுத்தே. 24

ஓரெழுத்தாதிநிராமயமைவருமுன்னரிய
பேரெழுத்தவ்வெழுத்தேயம்மைதேவிபிறங்கவள்பா
லாறெழுத்துஞ்சடைவானவர்தாமவனோடுதம்மைச்
சீரெழுத்தாறுமோர்வேலாயெடுத்ததிருவுருவே. 25

திருவுருவாகியசெவ்வேண்முருகனஞ்சிந்தையுள்ளே
யருவுருவாய்நின்றவாறெழுத்தாயுன்னையாண்பெண்ணிதென்
றொருவுருவாய்க்கொள்ளப்போகாதவரவருள்ளத்திலே
கருவுருவெப்படியப்படியேநின்றகாரணமே. 26

காரணகாரியமிரண்டையுந்தாங்கிக்கடவுண்முன்னாட்
பூரணஞானமுகமாய்ப்பிரவேசிப்பப்பொங்கழலை
யாரணங்காப்பதெனவேயருவுருவாயநந்த
நாரணரூபமுஞ்சங்கரவேடமுநண்ணினதே. 27

நண்ணினவாறுமுகமாய்முருகனமதுளத்தி
லெண்ணினகாரியமெல்லாந்தரும்பொருளெல்லையில்லா
கண்ணினாறெழுத்தானமெய்ஞ்ஞானக்கருப்புயர்ந்த
மண்ணினும்விண்ணினுமியாவுமொன்றாய்நின்றமாமயமே. 28

மாமயமாமுருகோனாறெழுத்துமட்டற்றவரி
வோமயமாமவ்வுமுவ்வுமதாய்ச்சுழுத்தோங்குமுச்சிப்
பூமயமாய்ச்சிவமாய்ப்பரையாய்ப்பற்பொறியொடுநி
ராமயமாயெங்குந்தானாயிருந்தரகசியமே. 29

ரகசியமாமுருகோனாறெழுத்தையும்நம்பினர்க்குச்
சுகசெயமன்றியவசெயமில்லைத்தொழிற்படுத்துன்
முகசெயுந்தம்பநமோகநம்பேதனமுன்னளிப்போ
டகசெயமுச்சமுஞ்சங்காரமெட்டிற்குமாதியதே. 30

ஆதிபரைகங்கைதெய்வானைவள்ளியரன்முருகன்
சோதிமுகமைந்துமாறுமுகமழுச்சூர்க்கதிர்வேற்
கோதிலிடபமயில்கொன்றைமாலைகுளிர்கடப்ப
மோதியவஞ்செழுத்தாறெழுத்தாஞ்சுடருற்பனமே. 31

சுடர்சங்குசக்கரம்வேற்சூலமழுவிற்சரிகைகுளி
ரடர்தண்டுதண்டுகுடாரம்விட்டேற்றரிவாள்கரக
மிடர்துஞ்சுபாசமெரிபாரைமானோடாறுகையும்
படரும்படிப்பொங்கியாறெழுத்தங்கிபரந்ததுவே. 32

பரந்தந்தணன்செய்கைபல்லாயிரமும்பட்டூடுருவி
நிரந்தங்கரஞ்சிரம்பாதலம்பாதநின்றோர்முகமாய்த்
துரந்தன்றியாவையுஞ்சூர்க்களுமெற்றித்தொம்மென்னநடித்
தரஞ்சுந்தரஞ்சங்கரஞ்சம்புவாய்நின்றதாறெழுத்தே. 33

எழுத்தாறுமொன்றுபட்டேகிக்கருத்துளெழுந்ததொனி
வழுத்தாதமூலமுருகன்பொற்றாளைவைத்துளத்தே
பழுத்தோகையன்போடிரவும்பகலும்பரமுனக்கென்
றழுத்தாதுசத்தப்பிறவிக்கடல்விட்டகலரிதே. 34

பிறவிக்கடற்குடற்சக்கரமாவிபெருஞ்சரக்கி
லறவித்தபத்தொன்பதாறுமச்சாணியயன்கையிணா
ணிறவித்தமந்திரமூன்றுநங்கூரமுன்னஞ்செழுத்தும்
துறவித்தவொட்டன்குகனாறெழுத்தின்சுயகர்த்தனே. 35

...கிரிசீரலையேரகங்காண்பலகுன்
...சோலைமலையாவினன்குடியாறுமென்பர்
வித்தென்பதாயென்னுளாதாரமாறுவெவ்வேறுருவாம்
பித்தன்சருவகுருவாஞ்சடாக்கரப்பேரொளிக்கே. 36

குருவானவையன்சுடர்க்கரத்தாகமங்கூறிமுன்னே
யருவானவெட்டவெளிபாழுரையுணர்வற்றவிடம்
பெருவானறிவுதெளிவாயளவற்றபேரொளியா
யுருவானதீதமுருவாம்படிக்கனிவுற்றதுவே. 37

உற்றதுமெவ்விடமிவ்வண்ணமின்னதென்றோதநினைப்
பற்றதுபற்றற்றதும்மனப்பாவகமானதெங்கே
பெற்றதேயவந்தாமோமூச்சுவிட்டதுபின்பசைவாய்ச்
சொற்றதுசொற்றிடத்துண்டுளந்தேக்கித்துணுக்கென்றதே. 38

துணுக்கென்றுயமுன்சரணஞ்சரணெனத்தோற்றியொரு
கணுக்கிண்டிலையுடன்பூத்ததுகாய்த்துக்கனிவடிவாய்த்
திணுக்கென்றுள்ளூடெழுஞ்செக்கரும்பச்சையுந்திங்களுமா
யணுக்கண்டதுண்டிலையென்றேநிசபரமானதுவே. 39

பரமானதாதிசிவமாதிசத்தியுற்பத்திமுத்தி
யுரமானபார்வையுறுவிந்துநாதத்துதிமௌனந்
திரமானசற்குருதேசிகநாமந்திடாரித்தநந்
தரமாமகாரமுகாரமோங்காரித்துச்சத்தித்ததே. 40

சத்தித்ததளவன்றாணாயவனவடன்வடிவாய்
முத்தித்தபிச்சைமுழுமுதலாய்ச்சண்முகவடிவா
யத்தித்தறுசமயத்தொழிலாறுக்குமாறெழுத்தாய்ச்
சித்தித்தென்னுவிளையாடலண்டத்தின்செய்கையதே. 41

அண்டத்திலுள்ளதுபிண்டத்திலுமுண்டவ்வாறெழுத்தும்
பண்டித்ததற்சதகோடிமகாசித்திபண்ணுதற்காய்த்
துண்டத்துடலுயிராய்ப்பரைசெய்தசூத்திரத்தாற்
கண்டித்தநமசிவாயாவெனவுருக்காட்டியதே. 42

உருவானமூலமதுவட்டநாலிதழுள்ளின்முக்கோ
டருவாம்பிரணவச்சத்தியுட்சவ்வுஞ்சருவமயக்
குருவாமதோமுகமவ்வேதியானங்குளிர்ந்தலிங்க
மருவாமவையிவைதானேகணபதியானதுவே. 43

ஆனமண்ணூறிதழ்நாற்கோணம்பொன்னிறமஞ்சுகுண
மீனமின்மூலம்துள்ளிமெனவ்வாகுமிவையுவந்த
பானமமிர்தமுகஞ்சத்திதேவிசொற்பார்வதியா
டானுயர்மந்திரநவ்வாகுநான்முகன்சக்கரமே. 44

சரமாயவைப்பிறைகோணமெண்பத்திதழ்காண்குணமாற்
றமாயருளவுவப்பலங்காரமுட்டந்தையதாய்
வரமாயதேவிதிருமுகம்வாமமாமந்திரமே
திரமாயதோகமநாராயணவரிசெய்கையதே. 45

அரிவன்னிசெம்மைமுக்கோணமுமுன்னிதழாறிரண்டாம்
பரியுண்மைமவ்வுஞ்சிவன்சத்திபார்வதிதானுளதாம்
பரியுண்ணரூத்ரமகோரமுகமன்பர்பாவமறத்
தெரியுண்மைமந்திரஞ்சிகாரமுருத்திரன்சேவடியே. 46

அடியானவாயுகறுப்பறுகோணம்பதினறிதழ்மேற்
றிடியானிரண்டுகுணம்பொருட்பேர்வவ்வுதேகலிங்கம்
பிடியானசாம்பவிசத்திமுகந்தற்புருடமருட்
டுடியானமந்திரமேவம்மயேசுரன்தோற்றங்களே. 47

தோற்றியவானதுதூநிறவட்டந்தொடுமிதழரண்
டேற்றியவோர்குணமவ்வாம்பரம்பற்றியேபிரியுஞ்
சாற்றியபங்கின்மனோன்மணிதேவியீசானமுகம்
போற்றியவவ்வரிநீயுஞ்சதாசிவபூரணமே. 48

பூரணமாகியவான்காலனலப்புபூமியிவை
சாரணமூலமுந்தானுகியோரிதழ்த்தாமரைமேல்
காரணவவ்வுமென்னுள்ளஞ்சுடர்ப்பிறைகாட்சியுமா
யாரணயோகிபராசத்திதேவிநின்னங்கமதே. 49

ஏயுமிதழ்பத்தொன்றினுநின்றவோரெழுத்துறுப்பாங்
காயமுட்சக்கரமாறெழுத்தாகுங்காத்ரமுயிர்
பாயும்பிரணவமேபரைதோற்றம்பலசித்திகொண்
டாயுமுடற்பொருளாவியும்வேட்களியானந்தமே. 50

களியாதொருவர்க்குத்தோயாதிங்கன்பர்க்குத்தோயும்வெட்ட
வெளியாணையில்லைமெய்ஞ்ஞானவதீதம்விளங்கியசொற
றளியாறெழுத்துள்ளவாதாரமாறூடுதற்பரைவிட்
டளியாதிடத்திற்குருமுருகோனின்றததிசயமே. 51

ழுத்தாறுஞ்சிவமுமறுமுகமாய்க்
கைநெற்றிக்கண்ணெனக்காட்சியுமாய்
செயுமாமயில்வேற்சத்தியாவுங்கைவேற்படையாற்
றுதிசெயுமன்பர்முன்னோங்காரவட்டத்துட்டோன்றியதே. 52

ஓங்காரவட்டத்துளாதாரமாறும்விட்டோங்கியரி
ரீங்காரவட்டத்துளேவிந்துநாதமிணைச்சுடர்மேல்
பாங்கானபரசிவமாகியொன்றாய்ப்பரவெளிநின்
றாங்காரத்தாண்டவியாறெழுத்தாறுமுகத்தம்மையே. 53

ஆறுமுகத்தம்மைவேலாயிநின்னெழுத்தாறுமுரு
வேறுமுகத்திற்கிலக்கோர்முகமில்லைவெவ்வினையைச்
சீறுமுகத்துக்குமராயியன்பர்சிந்தித்துநினைப்
பேறுமளித்தவர்க்குள்ளெழுத்தாந்திரற்பெண்கொடியே. 54

பெண்கொடிமேயபரமாயிசிவாயிபிரணவத்தி
நண்கொடியேமுருகாயிகுகாயிநலமுடைய
பண்கொடியேயென்னுளமேயிரவும்பகலும்விடா
தண்கொடியாதிசடாக்கரியீஸ்வரியம்பிகையே. 55

அம்பிகையம்பத்தோரக்கரியுச்சரியன்பர்தமை
தம்பிகைவெவ்வினைச்சங்கரிசூலிசரமசரம்
தும்பிகையைந்துடையான்றொழில்வாசிசுகந்தனெனக்
கும்பிகையம்பரவல்லிசடாக்கரிகுண்டலியே. 56

குண்டலிபாரதிலக்குமிபார்வதிகோமளைப்பூ
மண்டலிசாம்பவிதேவிமனோன்மணிவாகினிப்ர
சண்டலிகாரியகாரியுகாரிசடாக்கரிமா
விண்டலியாண்பெண்ணிரண்டுருவாய்நின்றமின்னொளியே. 57

மின்னொளியாயண்டபிண்டசராசரம்விண்ணுமண்ணுந்
தன்னொளியானசடாக்கரிசாம்பசதாசிவமென்
றுன்னொளியீஸ்வரன்ருத்திரன்மாலயனோதரிதா
மன்னொளியைவர்க்குமாதாவுந்தையனுமானவளே. 58

மாதாபிதாகுருதெய்வம்பெறுதவமற்றுமுள்ள
தாதாவலியிட்டகாமியமோதுஞ்சடாக்கரமென்
றாதாரமென்றனுடற்பொருளாவியருட்பலனின்
பாதாரவிந்தமுந்தந்தென்னைக்காக்கும்பராசத்தியே. 59

பராசத்தியுத்தமிபாசாங்குசத்திபரஞ்சுடர்மா
நிராசத்திரீறணிபூரணிகாரணிநின்மலியாம்
வராசத்தியாதிவடுகாயியட்டவயிரவிநந்
தராசத்திருத்ரிசடாக்கரிநிட்களத்தாண்டவியே. 60

தாண்டவிகோரிமகிடாசுரன்சிரந்தட்டழியத்
தீண்டவிபாசுபராக்ரமசூலிநற்சீரரவம்
பூண்டவிராகினிராகிபொன்னமையென்புன்மையறுத்
தாண்டவிபஞ்சசபைவல்லியாறெழுத்தாநந்தியே. 61

ஆநந்தியம்பையம்மைபுவனுயியகாரசத்தி
தாநந்திகலாதிவடவாகினிசிவசம்புபர
மாநந்திபேதநமாமயரூபினியாதிகமழ்
தேநந்திபூங்குழல்வாலைபுவனைதிரிபுரையே. 62

திரிபுரையாறெழுத்தாங்காரிநங்கலிசிந்தவறுத்
தெரிபுரையம்பிகைவம்பரைவேற்கொண்டெறிந்துயிரைப்
பரிபுரையென்னுளமேகோயிலென்பற்றுன்பாயலுமாய்
மரிபுரையென்னகநின்னகமாக்கொண்டமாதங்கியே. 63

மாதங்கியன்பர்பிறவிக்கடலைவடவனலாய்க்
கோதங்கிமுன்னைவினையையுங்கூற்றையுங்கோதியுள்ளத்
தேதங்கிநின்றுவிளையாடும்பெண்பிள்ளையென்செவிக்கே
போதங்கிலீமையும்யவ்வுமொன்ருகியபூரணமே. 64

பூரணம்வையெனப்போக்கும்பிறப்பைப்புணர்கிலியுங்
காரணநின்னருட்காட்டிடுஞ்சவ்வெனக்கன்னிகைநின்
ஞரணதற்சொருபம்மனவாக்குவையாறெழுத்தி
ஞரணனுன்முகனைம்முகனும்நின்றநாயகியே. 65

நாயகிநின்னன்பர்பாதத்தையர்ச்சிக்கும்நற்கடம்பந்
தோயகிலாரமுஞ்சாந்தமுங்கொன்றைத்தொடையலுநின்
சேயகிலாண்டமென்றேத்தியவாதிதிருமுடிக்கே
யாயகிலாண்டமுந்தேக்குநின்னுறெழுத்தக்கரியே. 66

ஹரிஓம்நமோத்துசிந்தம்மகரம்முதலவ்வவ்வுந்
தெரிவானமந்திரமோராறெழுத்துநின்சித்தில்பல
விரிவாகியவண்டபிண்டசராசரம்வேதமெவ்வும்
வரியானதுங்கண்டதவ்வுஞ்சிவாயவசியென்பதே. 67

...வசியவென் னுமந்திரமஞ்சுடன்மூன்
...காரமும்மண்டலத்தினுமொட்டவுடன்
...ளவுஞ்சிவஞ்சத்தியச்சத்தியாவியைக்காக்குமவ்வுஞ்
சவ்வுஞ்சிவசிவவென்பாரிருவினை தானறுமே. 68

அறுமாம்பசுவென்னையயன் குருவந்தானடைந்தோர்
மறுமாதர்கர்ப்பஞ்சிசுநசித்தோர்கள்வதைபலவுஞ்
செறுமாம்பகுதிசிவத்துவத்தீயையந்தின் னுநினைப்
பெறுமாதவர்க்கெழுத்தாறுங்குடிலைப்பெருநெருப்பே. 69

நெருப்புநெருப்புபிரணவப்பெண் ணுந்தனெஞ்சவஞ்சர்க்
கிருப்புநெருப்புக்கபாடநின்னிடர்க்கிரவிவெண்ணெய்க்
கருப்புநெருப்புறைகாணார்மெய்க்கண்டகனிகயிலைப்
பொருப்புநெருப்புவிருப்புறுஞானப்பொறிக்கொழுந்தே. 70

கொழுந்தேமரகதக்குன்றேயிரத்னக்கொடிமுடிபூத்
தெழுந்தேபிரகாசிப்பைவீரேழுலகெண்டிசைபுவனந்
தொழுந்தேவருந்தொழில்வேதம்பலவெழுதோற்றத்தெம்மை
யழுந்தாமுன்பெற்றெடுத்தாளரியோமெழுத்தக்கரியே. 71

ஹரிஓமகாரவவ்வுஞ்சிவாயங்கியங்கிசமாங்
கிரிஓமையுங்கிலியுஞ்சவ்வுஞ்சவ்வுங்கிலியுமையு
மரிஓஞ்சொருபவருட்செயம்ரீம்ரீயுஞ்சிரியும்
திரிஓங்கிலியுஞ்சரஹணவாயிசிவகுருவே. 72

குருவாந்திரிபுரபவநமாயிகுமாரிமகா
திருவாந்திகழொளிபவ்வவ்வுமானசிவக்கடலே
மருவாம்பரிபுரபவசிவமானந்தவாரிபெருங்
...ருவாஞ்செயலொழிபவநமவாயிகயற்கண்ணியே. 73

கண்ணியெனுஞ்சரஹணபவதேவிகமலனரி
நண்ணார்புரமெரித்தோன்மூவரைப்பெற்றநாயகியே
பெண்ணீரவர்க்குமம்மாவென்றுநின்றபெருஞ்சுடரே
யண்ணீரெழுத்திற்குந்தாயாகிவந்தவரும்பொருளே. 74

அஆஇஈஉஊஎஏஐஒஓவெனுமைந்தெழுத்தி
இஈஒஓஔநமநாராயணவென்றெட்டெழுத்தி
உஊஎஏஒஓஔவென்பவாமைம்பத்தோரெழுத்தி
எஏஒஓஔவும்மௌவுமதாய்நின்றவம்பிகையே. 75

அவ்வுமுவ்வுமொவ்வுமவ்வொடுறீங்கொடுஐயுங்கிலியு
சவ்வும்பரைசிவமங்குங்கொங்கென்றசத்தம்மிரண்டு
மௌவுஞ்சரவணபவவென்றஞானத்தொருவனரு
ளெவ்வுமறிகூறிரண்டையுந்தாக்கிநின்றதோரெழுத்தே. 76

அரிக்குமுதற்பொருளெப்பொருளும்மண்டபிண்டமுமங்
குரிக்குஞ்சடாக்கரத்தோசையைப்பற்றுங்குணமறிந்துச்
சரிக்குந்தொழும்பர்க்குளாதாரமாறுந்தங்குமிருண்
மரிக்கும்பரவெளியாகுநின்பதம்வழிப்படுமே. 77

வழிப்படுவாசலில்வாசியுள்வாசலில்வாங்கியப்பாற்.
சுழிப்படுமாறெழுத்தங்கியைக்கோத்துச்சுழித்தவல்லா
ரழிப்படுந்தன்றலைமாலயன்கையெழுத்தஞ்செழுத்துங்
கழிப்படும்பின்பெமனோலையதில்லைகனவினுமே. 78

கனமானமாயமிக்காயம்விட்டாவிகடக்குமுன்னே
மனமானபாவியைத்தன்வசமாக்கிவசியெனுமுற்
பனமானவேணியிலாறெழுத்தேத்திநின்பாததரி
சனமானயோகியழியாரெக்காலமுஞ்சத்தியமே. 79

சத்தியமூலத்திரவியையூன்றிச்சரநிலைமேற்
பற்றியதீயிற்சகத்திரத்தெல்லையும்பாழ்படுத்தி
முற்றியசந்திரகலையூடுருவிமுடிவிலுன்னை
யத்தியசீவன்சிவமாகக்காட்டுநின்னாறெழுத்தே. 80

ஆறெழுத்தானநின்னானந்தமைம்பத்தோரக்கரத்திற்
கீரெழுத்தோரெழுத்தைந்தெழுத்தீரெழுத்தேத்திவல
மாறெழுத்தங்கிவடிவாய்க்கடாசலவாசல்புகுந்
தூறெழுத்துண்ணமிர்தஞ்சிவயோகிக்கிதுவுற்பனமே. 81

உற்பனமாகியவோங்காரவட்டத்தையூடுருவி
யற்பனவாக்கையினுள்ளேசிவாவெனுமக்கரத்தைச்
சற்பனபாடைக்குந்தாயாறெழுத்தினுட்டாக்கியன்பா
னிற்பவர்யோகிதபசழியாதிதுநிச்சயமே. 82

நிச்சிநிலாக்கொழுந்தாறெழுத்தங்கியைநின்மலமா
யுச்சியுமூலமுநோக்கிரண்டாமைம்பத்தோரெழுத்தா
லச்சினைநாட்டிசிவாக்கினிமூட்டிநெஞ்சண்டபிண்டம்
வச்சிரயோகியவனேவயிரமகாசித்தனே. 83

...வும்வேகமும்வாசியுஞ்சேவைசெய்யும்
...மாறெழுத்தேத்திப்பதனமதாய்
...லுங்காற்றுங்கடலுங்கயிறுங்கள்ள
மவத்தனும்பாதையும்பார்த்தோட்டுவார்கரையேறுவரே. 84

ஏறுவதுகண்செவிமூக்குநாக்குநெஞ்சம்மிரண்டு
கூறுசெய்தந்தரங்கத்தேநமதுகுருவெனவே
தேறுவதாதியுமந்தமுந்தாங்கிச்சிவநடுவா
யாறுதலம்வரையாரையும்பார்ப்பதிவ்வாறெழுத்தே. 85

ஆறெழுத்தோரெழுத்தாற்பெறவாசியையச்சமன்றி
யாறெழுத்தோரெழுத்தாற்கடிவாளமிட்டந்தரங்கத்
தாறெழுத்தோரெழுத்தாற்கல்லணையைவைத்தங்கவடி
யாறெழுத்தீரெழுத்தோரெழுத்தேற்றிடவானந்தமே. 86

அந்தத்தின்பின்கலையாதியிலேயிடையாக்கிவர
விந்தத்திற்பாய்ந்துசுழிமுனைபோய்ப்பெருவெள்ளத்துள்ளாய்
பந்தத்தனற்கதிர்பான்மதிநாதப்பரப்புமுப்பா
ழிந்தக்கண்காக்ஷிக்கிப்பாலென்னையாண்டவிறையிருப்பே. 87

இறையிருக்கும்திடமெய்தினுங்கந்தனிடம்புகுந்தான்
மறையிருக்குங்கலைக்கொப்பறுமட்டுமருவலன்றிச்
சிறையிருக்கும்படியித்தலங்கொஞ்சஞ்சிணுக்கைவிட்டோர்
துறையிருக்கத்துறைசென்றுடக்கன்னித்தொடக்கறுமே. 88

தொடக்கறுமின்பமுந்துன்பமுங்காட்டிச்சுமந்தலையும்
விடக்கறுமெய்பொய்விருப்பும்வெறுப்பெனும்வெட்டவெளி
நடக்கிறபாதைநடக்கறியாமனடக்குமிந்தச்
சடக்கறுப்பார்மனமற்றதெல்லாங்கெடிசாத்திரமே. 89

சாத்திரம்வேதஞ்சமயம்வண்ணாத்திதண்ணீரில்விட்ட
மூத்திரம்போம்படிபோமனனேயந்தமூத்திரமோர்
பாத்திரங்கொள்ளப்பலனுண்டதினொருபாழுமில்லை
கோத்திரமுங்குலமுங்குடிபோம்நின்னைக்கூடினர்க்கே. 90

கூடினதாருகைகொண்டவனுருகுருக்களெவன்
பாடினமந்திரமாறுமின்னூன்கும்பொய்பாரிருணீ
வீடினபோதுமெய்ஞ்ஞானவதீதவிலாசவெளி
நாடினதும்மங்குநின்றதுநீவள்ளிநாயகமே. 91

யகநீயெனநானே துநானெனன்னநம்ப லுன்னைத்
தாயகமென் னுந்தரமேது றசொல்லுந்தானிறந்தும்
போயகமும்புறமும்போன்றதாம்பரிபூரணத்துள்ளொளி
யாயகலாதிடமொன்ருகக்காட்சியறப்பெற்றதே. 92

பெற்ருளும்பொய்பிறப்பித்தானும்பொய்பெண்டிர்பிள்ளையும்பொய்
உற்ருரும்பொய்புலகத்தாரும்பொய்நம்முடம்புயிர்பொய்க்
கற்ருர்பிதற்றலும்பொய்சமயாதிக்கடவுளர்பொய்
முற்ருமுலைவள்ளிபங்கனெங்கோன்மெய்யன்முன்னிற்கவே. 93

முன்னிற்பதாரவன்முன்னிற்பதாருமுருகனவன்
என்னிற்கும்வெம்பகலோவிருளோதெய்வம்வேறுளதோ
தன்னிற்குந்தன்னிழறன்னிடமானவத்தன்மையைப்போல்
உன்னிற்குமுன்னிழனுமுன்னிடத்திலொடுக்கங்களே. 94

ஒடுக்கமுந்தோற்றமுமுன்னையல்லாதில்லையுன்யுன்னைனுற்
படுக்கவிரட்சிக்கவும்பாரிருவினைப்பந்தமறு
மிடுக்கமுமின்பமுமில்லாதிடத்திலிருவருமற்
றடுக்கவுமுன்றனைச்சென்ருடுதீர்த்தம்வந்தாடினதே. 95

ஆடினபம்பரமோகயிருேவெறிந்தானிடமோ
சாடினதாபரமோவசைபோனதென்றன்னுயிருங்
கூடினதம்மையப்பனுமுன்றன்படுகுழிவீழ்ந்
தோடினதெவ்விடமவ்விடநீயென்றுணருவதே. 96

உணராதபோதமுரையாதவுடற்பொருளாவியொன்றைப்
புணராதபோகம்புரையற்றசோதிப்புலன்குழைய
மணராதவாசமகிழாதவாநந்தவள்ளிபங்கன்
கணமாகியென்னைப்பிரியாச்சிவனின்றன்கண்வடிவே. 97

வடிவம்பொருளருண்முக்குணம்வாக்குமனமுமடி
முடிவுமில்லாதமுடிவினைச்சூட்டிமுருகனென்றே
படிகந்தனிற்கண்டகாக்ஷிப்பிரபஞ்சபார்வையற்ருல்
விடியும்பொழுதிலிரண்டுமொன்றேதெய்வம்வேறில்லையே. 98

இல்லையுண்டென்பதிரண்டுஞ்சொல்லாதவிடமதுன்னிக்
கல்லையுஞ்செம்பையுமண்ணையுங்கூட்டிக்களிவுருது
ஒல்லையிற்போனவுயிருடன்கூடியுதவிசெய்யா
தல்லையிற்சுத்தத்தவராகவன்புற்றரற்றுவதே. 99

ப்பும்மின்னதென்னவோராகமத்தாற்
படாமையெங்கும்பராபரமாய்
தலுமமானறுநிரவாதமையுநினைப்புமறப்
பிரத்தலுமெய்தலுமில்லாததோற்றநீயெவ்வண்ணமே. 100

எவ்வண்ணமெவ்வுருவெவ்வுயிரெவ்விடமென்றறியாய்ச்
செவ்வண்ணவூமன்கனுவுரையற்றநின்சேவடியாய்ச்
சவ்வண்ணமென்றரன்சங்கரிகோபத்தைத்தான்கவர்ந்த
தவ்வண்ணமாதிமறைபேசவையமறிந்ததுவே. 101

வையஞ்சலமங்கிகால்வான்பலவுயிர்வான்முடியோ
டெய்யும்பரமுதற்சார்வதெல்லாமெம்பிரான்முருகா
தெய்யெனநின்றுநின்ருட்சிலம்போசைத்திருவிளையாட்
டையநின்னங்கமதென்னங்கமாய்நின்றவாநந்தமே. 102

ஆறெழுத்தந்தாதி

முற்றிற்று.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை;—1936.